சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 24.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 62/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | ஸ்ரீராம் |
| தந்தை பெயர் | : | பார்த்தசாரதி |
| கிராமம் | : | திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் |
| வயது | : | 55 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் திருச்சி மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக வலங்கைமான் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக பணியிலிருந்தபோது திருவாரூர் மாவட்டம், நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த கொடுத்த வேண்டுகோள் கடித்தின் அடிப்படையில் வலங்கைமான் வட்டம், விச்சூர், தெற்கு தெரு கிராமத்தை சேர்ந்த அன்பழகன் மகன் அ.சா-1 அபிக்கண்ணன், அதே ஊரை சேர்ந்த சம்பத் மகன் அ.சா-2 சஞ்ஜய், வலங்கைமான் வட்டம், மாஞ்சேரி கிராமத்தை சேர்ந்த பாஸ்கர் மகன் அ.சா-3 சந்தோஷ் என்பவர்களுக்கு இந்து பறையன் என சாதி சான்றிதழ்கள் வழங்கினேன். அ.சா-1 முதல் 3 வரையானவர்களுக்கு நான் வழங்கிய சாதி சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ-8 முதல் 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் வலங்கைமான் வட்டம், விடையல் கருப்பூரை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் மகன் 1ம் எதிரி ஹரிகரன் என்பவர் இந்து படையாச்சி சமூகத்தை சேர்ந்தவர் என்பது தொடர்பாக சாதிசான்றிதழ் வழங்கியுள்ளேன். அந்த சாதிசான்றிதழ் **அ.சாஆ-11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே ஊரை சேர்ந்த முனியப்பன் மகன் 2ம் எதிரி முகேஷ் என்பவர் இந்து அம்பளக்காரர் சமூகத்தை சேர்ந்தவர் என்பது தொடர்பாக சாதி சான்றிதழ் வழங்கியுள்ளேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சாஆ-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே ஊரை சேர்ந்த செல்வராஜ் மகன் 3ம் எதிரி சிவராமன் என்பவர் இந்து அம்பளக்காரர் சமூகத்தை சேர்ந்தவர் என்பது தொடர்பாக சாதி சான்றிதழ் வழங்கியுள்ளேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சாஆ-13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே ஊரை சேர்ந்த கேசவன் மகன் 4ம் எதிரி சூரியபிரகாஷ் என்பவர் இந்து படையாச்சி சமூகத்தை சேர்ந்தவர் என்பது தொடர்பாக சாதி சான்றிதழ்

வழங்கியுள்ளேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சாஆ.-14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே ஊரை சேர்ந்த பாஸ்கர் மகன் 5ம் எதிரி திவாகர் என்பவர் இந்து கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் என்பது தொடர்பாக சாதி சான்றிதழ் வழங்கியுள்ளேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சாஆ.-15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.24 17:52:19 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.